# PROFILE

NAME : His Holiness Sri-La-Sri Deivasigamani Ponnambala Desiga Paramachariya Swamigal

(Thavathiru Kundrakudi **PONNAMBALA ADIGALAR**)

DATE OF BIRTH : 09-07-1964

QUALIFICATION : B.Sc.,(Chemistry) Tamil Scholar

HEAD OF THE ADHEENAM : Since 03-07-1993 ILAIYA PATTAM
&
From 24-04-1995 As HEAD

ADDRESS : Thiruvannamalai Adheenam (Mutt),
Kundrakudi – 630 206,
Sivaganga District, Tamilnadu, India.
Phone : 04577 – 264227, 264466

e-mail : adigalar_kundrakudi@yahoo.com

**RESPONSIBILITIES** :

MANAGING TRUSTEE : Thavathiru Kundrakudi Adigalar Educational Trust

HEREDITARY TRUSTEE **:**

1. Arulmigu Shanmuganathan Temple, Kundrakudi
2. Arulmigu Thiruthalinathar Temple, Tiruppattur
3. Arulmigu Mangaibhakar Temple, Piranmalai
4. Arulmigu.UruthirakodeeswararTemple,S.V.Mangalam
5. Arulmigu. Kakolapureeswarar Temple, Thirukolakudi
6. Arulmigu.ThenachiammanTemple,Thenachiammankoil

PRESIDENT : **Thiruvannamalai Adheenam Educational Trust**

| | |
|---|---|
| 1) Elementary Schools | 5 |
| 2) Middle Schools | 2 |
| 3) High Schools | 2 |
| 4) Higher Secondary Schools | 4 |
| 5) Industrial Training Centre | 2 |
| 6) Industrial Schools | 2 |
| 7) Colleges | 2 |
| 8) Centre for Research | 1 |
| | **20** |

STATE PRESIDENT **:**

1. Arulneri Thirukkoottam
2. Thirukkural Peravai
3. Thiruvarul Peravai – An organization consisting of leaders of all religions for promotion of religious harmony

CO-ORDINATOR **:** 1.Village Planning Forum, Kundrakudi for Rural Development Activities
2.Farmers Organization, Kundrakudi

Founder President **:** JAN SHIKSHAN SANSTHAN (J.S.S.), Kundrakudi.

BOOKS AUTHORED **:** 1.Samaya Vazhvu (Tamil)
2.Kattril Vandha Karuthu Mazhai (Tamil)
3.Tamil Panpaadu (Tamil)
4. Uyir Naaril Thoduththa Maalai (Tamil)
5. Medai Thendral (Tamil – in Print)
6.Thiruvembavai Thiran (Tamil – in Print)

EDITOR **:** 1.**Makkal Chinthanai** - Monthly Magazine (Tamil)
2. **Arika Ariviyal** - Monthly Science Journal (Tamil)

**AWARDS RECEIVED :**

1. **Krishak Shironmani Samman** (Govt. of India.)
2. **Kalai Maamani** (Tamil Nadu State Government)
3. **Muthamizh Perarignar** (Madurai Tamilisai Sangam)
4. **Iyal Selvam** (Chennai Muthamizh Mandram)
5. **Thiruvalluvar Virudhu** (Tamilnadu State Government)
6. **Tamil Chemmal** (Madurai Kamaraj University)
7. **Best Humanitarian Award** (Gandhigrama University)
   **& other Awards.**
8. **Honorary Doctorate (D.Sc.,)** (Kovai Karpagam University)
9. **Sri Mahatma Jyothi Rao Phooley Award** (SIRC-Bangalore)

**TOUR ABROAD** :

1. Invited & Participated at **Singapore Thirukkural Peravai Conference** (2005)
2. **Malaysia Arulneri Thirukkoottam Conference** (2005)
3. The (Ninth) **Saiva Conference in London,** by the Federation of Saiva (Hindu) Temples, **U.K.** (2006)

**CONTRIBUTION TO THE DEVELOPMENT OF SOCIETY:**

Deeply involved in the promotion of Social, Economic, Educational & Cultural development of the Society and National Integration

# தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

பெயர் : திருப்பெருந்திரு தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிக பரமாசாரிய சுவாமிகள்
**(தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்)**

தோற்றம் : 09-07-1964

கல்வித் தகுதி : பி.எஸ்.ஸி (வேதியியல்)

துறவு மேற்கொண்ட நாள் : 22-06-1993

இளையபட்டம் ஏற்ற நாள் : 03-07-1993

ஞானபீடம் அமர்ந்த நாள் : 24-04-1995


முகவரி : திருவண்ணாமலை ஆதீனம்
குன்றக்குடி - 630206
சிவகங்கை மாவட்டம்
தமிழ்நாடு
04577 - 264227, 264466

Email :adigalar_kundrakudi@yahoo.com


## பொறுப்புகள்

**ஆதீனகர்த்தர்** : குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம்

**நிருவாக அறங்காவலர்** : தவத்திரு குன்றக்குடி அடிகளார் அறக்கட்டளை

**பரம்பரை அறங்காவலர்** :

1) அருள்தரு சண்முகநாதப்பெருமான் திருக்கோயில், குன்றக்குடி
2) அருள்தரு திருகொடுங்குன்ற நாதர், அருள்தரு மங்கைபாகநாதசுவாமி திருக்கோயில், பிரான்மலை
3) அருள்தரு உருத்திரகோடீசுவரர் திருக்கோயில், சதுர்வேதமங்கலம்
4) அருள்தரு திருத்தளிநாதர் திருக்கோயில், திருப்புத்தூர்
5) அருள்தரு ககோளபுரீசுவரர் திருக்கோயில், திருக்கோளக்குடி
6) அருள்தரு தேனாச்சியம்மன் திருக்கோயில், சிராவயல்

**தாளாளர் / செயலாளர்** :

## கல்வி நிறுவனங்கள்

1) ஸ்ரீதெய்வசிகாமணி அருள்நெறித் தொடக்கப் பள்ளி, குன்றக்குடி
2) டாக்டர் அம்பேத்கார் அருள்நெறித் தொடக்கப்பள்ளி, நாங்குனேரி
3) அருள்நெறி இந்து தொடக்கப்பள்ளி, திருமலையப்பபுரம்
4) சரசுவதி தொடக்கப்பள்ளி, ஆயக்காரன்புலம்
5) இந்து அருள்நெறித் தொடக்கப்பள்ளி, விஜயஅச்சம்பாடு
6) திருவள்ளுவர் அருள்நெறி நடுநிலைப்பள்ளி, தேவகோட்டை
7) திருவள்ளுவர் அருள்நெறி நடுநிலைப்பள்ளி, கொறுக்கை
8) அருள்நெறி இந்து உயர்நிலைப்பள்ளி, திருமலையப்பபுரம்
9) செந்திலாண்டவர் இந்து அருள்நெறி உயர்நிலைப்பள்ளி, விஜயஅச்சம்பாடு
10) தருமைக் கயிலைக் குருமணி மேல்நிலைப்பள்ளி, குன்றக்குடி
11) வள்ளல்பாரி மேல்நிலைப்பள்ளி, பிரான்மலை
12) திருப்பதி அருள்நெறி மேல்நிலைப்பள்ளி, கள்ளிமந்தயம்
13) கோமதி அருள்நெறி மேல்நிலைப்பள்ளி, களக்காடு
14) திருவள்ளுவர் கல்லூரி, பொதிகையடி, பாபநாசம்
15) திருவள்ளுவர் தொழிற்பயிற்சி மையம், வாழப்பட்டு
16) தவத்திரு குன்றக்குடி அடிகளார் நினைவுத் தொழிற் பயிற்சி மையம், குன்றக்குடி
17) தவத்திரு குன்றக்குடி அடிகளார் நினைவுத் தொழிற் பள்ளி, குன்றக்குடி
18) திருவள்ளுவர் தொழிற்பள்ளி, வாழப்பட்டு
19) தவத்திரு குன்றக்குடி அடிகளார் மகளிர் கல்வியியல் கல்லூரி, குன்றக்குடி
20) கல்வி உயர்ஆய்வு மையம், குன்றக்குடி

**மாநிலத் தலைவர்** : அருள்நெறித் திருக்கூட்டம்

**மாநிலப் பொதுச் செயலாளர்** : திருவருள் பேரவை

**தலைவர்** : 1) உலகத் திருக்குறள் பேரவை
2) மக்கள் கல்வி நிலையம், குன்றக்குடி
3) குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனக் கல்வி அறக்கட்டளை

**நெறியாளர் :** குன்றக்குடி கிராமத் திட்டக்குழு

**எழுதிய நூல்கள் :** 1) சமய வாழ்வு

2) காற்றில் வந்த கருத்து மழை

3) தமிழ்ப்பண்பாடு

4) உயிர் நாரில் தொடுத்த மாலை

5) மேடைத்தென்றல் (அச்சில்)

6) திருவெம்பாவைத் திறன் (அச்சில்)

**சிறப்பாசிரியர்:** ***மக்கள் சிந்தனை*** மாத இதழ்

**நிர்வாக ஆசிரியர்:** ***அறிக அறிவியல்*** மாத இதழ்

**பெற்ற விருதுகள்**

1) **கலைமாமணி விருது** (தமிழக அரசு)
2) **கிரிஷக் சிரோன்மணி ஸம்மான் விருது** (இந்திய அரசின் விவசாயத்துறை அமைச்சகம்)
3) **முத்தமிழ் பேரறிஞர் விருது** (மதுரை தமிழிசைச் சங்கம்)
4) **இயல் செல்வம் விருது** (சென்னை முத்தமிழ் மன்றம்)
5) **திருவள்ளுவர் விருது** (தமிழக அரசு)
6) **தமிழ்ச்செம்மல் விருது** (மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்)
7) **மனிதநேய பண்பாளர் விருது** (திண்டுக்கல் காந்தி கிராம கிராமிய பல்கலைக்கழகம்)
   மற்றும் பல விருதுகள்.
8) **மதிப்புறு முனைவர் பட்டம்** (கோவை கற்பகம் பல்கலைக்கழகம்)
9) **ஸ்ரீ மகாத்மா ஜோதி ராவ் புலேய் விருது** (பெங்களூர் தென்இந்திய மண்டல குழு)

**வெளிநாட்டுப் பயணங்கள்**

1) சிங்கப்பூர் – திருக்குறள் பேரவை மாநாடு (2005)
2) மலேசியா – அருள்நெறித் திருக்கூட்ட மாநாடு (2005)
3) இலண்டன்–ஒன்பதாவது சைவமாநாடு, இலண்டன் இந்துத் திருக்கோயில் நிகழ்ச்சிகள் (2006)

# தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

## வாழ்க்கைக் குறிப்பு

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம், திருக்கயிலாய பரம்பரைச் சைவ ஆதீனங்கள் பதினெட்டில் ஒன்று. திருவருள்திரு தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் இந்த ஆதீனத்தின் 46ஆவது குருமகாசந்நிதானம். இந்த அருளாளரை தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் என்று சுருக்கமாக மக்கள் அன்புடன் போற்றி அழைக்கின்றனர்.

தமிழுக்கும், தமிழ் நெறிக்கும் பல்லாற்றானும் தொண்டாற்றிய புகழ் சிறந்த தவத்திரு குன்றக்குடி அடிகளாருக்குப் பின் அவர்தம் வாரிசாக ஆதீனக் குருபீடத்தில் அமர்ந்துள்ள அருட் பெருந்தகையாளர் இவர்.

இவ்வருளாளர் 24–04–1995 இல் ஞானபீடம் அமர்ந்தருளினார். அன்று முதல் இத்தவசீலர் ஆற்றிவரும் சமய சமூகப்பணிகள் பலவாகும்.

தம் குருநாதர் நிறுவிய குன்றக்குடி கிராமத் திட்டக்குழுவின் தலைவராக இருந்து இயக்கி கிராமப்புற மக்களின் மேம்பாட்டுக்கு உழைத்து வருகிறார். சமயப்பணியும், பண்பாட்டு வளர்ச்சிப் பணியும், சமய நல்லிணக்கப் பணியும் ஆற்றிவருகிறார்.

இவர் இதுவரை ஏறத்தாழ 1000 மேடைப் பொழிவுகள் ஆற்றி உள்ளார். திருக்குறள் பற்றிய சொற்பொழிவுகள் 500 வரை ஆற்றி உள்ளார். உலகத் திருக்குறள் பேரவை இயக்கத் தலைவராக இருந்து மக்களிடையே திருக்குறள் நெறி பரப்பும் பணியைத் தலையாயப் பணியாக கொண்டு சிறப்பாக பணியாற்றி வருகிறார்.

இந்த அருட்பெருந்தகை சிங்கப்பூர், மலேசியா, இலண்டன் ஆகிய நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் சென்று சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார்.

மேலும் தமிழ்நாட்டில் புயல், மழை, வெள்ளம், தீ விபத்துக்கள் நேர்ந்த பல பகுதிகளுக்குச் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்குத் துயர்துடைப்புப் பணிகள் பல ஆற்றியுள்ளார்.

20 – 07 – 2004 கும்பகோணம் சரசுவதி பள்ளித் தீ விபத்தின்போது கும்பகோணம் சென்று துயர் துடைப்புப் பணி செய்ததும், 26 – 12 – 2004 சுனாமியால் பேரழிவு ஏற்பட்ட நாகைப் பகுதிக்குச் சென்று துயர் துடைப்புப் பணியாற்றியதும் குறிப்பிடத்தக்கவை.

### சமய நல்லிணக்கப் பணிகள்

தம் முன்னவரான தவத்திரு குன்றக்குடி அடிகளார் முயற்சியினால் தோற்றுவிக்கப் பெற்ற சமய நல்லிணக்கப் பணி இயக்கமாகிய **திருவருட்பேரவை** யின் மாநிலப் பொதுச் செயலாளராக தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் இருந்து பணியாற்றி வருகின்றார்கள்.

தென் மாவட்டங்களில் 1997–இல் நிகழ்ந்த சாதிக் கலவரத்தின் போது அப்பகுதிக்குச் சென்று 1997 மே 24 மற்றும் 25 ஆம் தேதிகளில் விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அனுமதியோடும், பாதுகாப்போடும், மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறியும் அமைதிப்பணி செய்தார். இராசபாளையம் திருக்குறட் கழகம், கம்பன் கழகம், மணிமேகலை மன்றம் முதலிய இலக்கிய அமைப்புகளின் அன்பர்கள் இப்பணிக்கு உறுதுணை செய்தனர்.

விருதுநகர் மாவட்டம் இராசபாளையம் பகுதியில் அடங்கிய மங்காபுரம், சங்கரலிங்கபுரம், முத்தாநதி, கிழவிகுளம், ரெங்கநாயக்கன்பட்டி, சோழபுரம், முகவூர் ஆகிய கிராமங்களும் ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் உள்ள இடையன்குளம், மம்சாபுரம், அமைச்சியார்பட்டி முதலிய கிராமங்களும், சிவகாசிப் பகுதி ஈஞ்சார் கிராமமும் பார்வையிடப்பட்டன. பொருட் சேதங்களை அறிந்து தமிழக அரசிடம் அறிக்கை தரப்பெற்றது. அந்த அறிக்கையில் இரு தரப்பிலும் தீக்கிரையான குடிசைகளுக்கு நிவாரண நிதியாக ரூ. 1000/– அரசு வழங்கியது. இது போதாதென்றும், கூடுதல் நிதி வழங்க வேண்டும் என்றும், தீப்பிடிக்காத மேற்கூரை வீடுகள் அமைக்க நிதிஉதவி வழங்கவும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பரிந்துரைக்கப்பட்டது. இந்த பரிந்துரையை ஏற்று அரசு கூடுதல் நிதி வழங்கியது குறிப்பிடத்தக்கது.

கோவை மாநகரத்தில் ஏற்பட்ட மதக் கலவரத்தின் போது அங்குள்ள திருவருட்பேரவை அமைப்பாளர் பேராசிரியர் அ.தேவராஜ் அவர்கள் துணையுடன் 26 –12 –1997 மற்றும் 27 – 12 – 1997 ஆகிய நாட்களில் அமைதிப் பணி செய்யப்பட்டது. கலவரம் நடந்த பகுதிகளுக்கு முஸ்லீம் – இந்து பிரமுகர்களுடன் சென்று பார்த்து ஆறுதல் கூறப்பட்டது. மேலும் சமய நல்லிணக்கப் பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்து அமைதிப் பணியாற்றப் பட்டது.

சாதிப் பூசலேற்பட்ட மதுரை மாவட்டம் உத்தபுரத்தில் 15– 05 – 2008 இல் சென்று சமாதானப் பணியாற்றினார்கள்.

இந்த அருட்பெருந்தகை சிறந்த பேச்சாளரும், எழுத்தாளருமானவர். தமிழகத்தின் பல பகுதிகளுக்கும் சுற்றுப் பயணம் செய்து சொற்பொழிவாற்றியும், பத்திரிகைகளில் எழுதியும் மக்களுக்குப் பணி செய்து வருகிறார்.

இப் பெருமகனாரின் தகுதியறிந்து தமிழக அரசு சொற்பொழிவுக்கான ***கலைமாமணி*** விருதும், மதுரைத் தமிழிசைச் சங்கம் ***முத்தமிழ்ப் பேரறிஞர்*** பட்டமும், இந்திய அரசின் விவசாயத் துறை அமைச்சகம் ***கிரிஷக் சிரோன்மணி ஸம்மான்*** விருதும், சென்னை முத்தமிழ் மன்றம் ***இயல்செல்வம்*** விருதும், தமிழ்நாடுஅரசு 2007ஆம் ஆண்டிற்கான ***திருவள்ளுவர்*** விருதும், மதுரை காமராசர் பல்கலைக்கழகம் சார்பில் 2008ஆம் ஆண்டிற்கான ***தமிழ்ச்செம்மல்*** விருதும், திண்டுக்கல் காந்தி கிராம கிராமிய பல்கலைக்கழகம் வழங்கிய ***மனித நேய பண்பாளர்*** விருதும் கோவை கற்பகம் பல்கலைக்கழகம் வழங்கிய **மதிப்புறு முனைவர்** பட்டமும் பெங்களூர் தென்இந்திய மண்டல குழு வழங்கிய **ஸ்ரீ மகாத்மா ஜோதி ராவ் புலேய் விருதும்** மற்றும் பல விருதுகளும் வழங்கிப் பாராட்டியுள் ளன. இந்தச் சிறப்புகள் இப் பெருமகனாரின் தொண்டுகளுக்குக் கிடைத்த அங்கீகாரமாகும்.

⁒÷⁒÷⁒÷⁒÷⁒